களும் அவரது தர்மபத்தினியாரும் புரசைபாக்கத்தில் வந்து
இருந்துகொண்டு அவர்களிடம் வந்துசேரும் விதவைப் பெண்
களை புனர்விவாகம் செய்யும்வரைக்கும் P. T. ஸ்கூலில் படிக்க
அனுப்புவது வழக்கம். சில வருஷங்களுக்குப் பிறகு சென்னை
யிலேயே "புனர்விவாக சங்கம்" ஒன்று ஏற்பட்டு அதில் டாக்டர்
முத்துலக்ஷ்மி அவர்கள் ஒரு முக்கிய அங்கத்தினர் ஆனபோது
என்னையும் அதில் ஒரு மெம்பராகும்படிக் கேட்டார். "அதில்
நான் மெம்பர் இல்லாமலிருக்கும்போதே எனக்கு வேண்டிய
விண்ணப்பங்கள் வருகிறதே, இன்னும் மெம்பரும் ஆகிவிட்டால்
நிலைமை இன்னும் மோசமாகிவிடும். ஆகவே என்னுடைய வேலை
அவர்களைப் படிக்கவைப்பது மாத்திரம்—பிறகு விவாகம் செய்து
கொள்ள இஷ்டப்படுபவர்களை உங்களிடம் அனுப்பிவிடுகிறேன்.
தகுந்த வரன் பார்த்து நீங்கள் விவாகம் செய்து விடுங்கள்" என்று
வேடிக்கையாகச் சொன்னேன். அந்தக்காலத்தில் பஞ்சாபில் ஸர்.
கங்காராம் என்று ஒரு கோடீச்வரர் இருந்தார். அவர் இளம் வய
தில்—உலகமே தெரியாதவயதில்—விவாகம் "பொம்மைக்கலியா
ணம்"போல ஆகி புருஷனையிழந்த கைம்பெண்களின் பரிதாப
நிலைமையைக் கண்ணுற்று, "புனர்விவாக சங்கம்" ஒன்று
அமைத்து, தன் ஆஸ்தியில் பெரும்பகுதியை அந்த சங்கத்துக்காகக்
கொடுத்து புனர்விவாகத்தை ஜனசமூகத்தில் ஒரு சாதாரண ஸம்
பவமாகச் செய்வதற்கு முயற்சித்தார். அதனுடைய கிளை ஸ்தாப
னமே நமது சென்னையில் ஏற்பட்ட மேற்கூறிய சங்கம். நிற்க.

ஆந்திரதேச சீர்திருத்தக்காரராகிய வீரேசலிங்கம் பந்துலு
அவர்கள், வட இந்தியாவில் ஸர். கங்காராம் அவர்கள் இன்னும்
எத்தனையோ பெரியவர்கள் பாலிய விதவைகளின் பரிதாபத்தைப்
பார்த்து இரக்கப்பட்டு முதல் விவாகத்தைப்போலவே புனர்விவா
கத்தையும் ஸர்வ ஸாதாரணமாக ஆக்கிவிட வேண்டுமென்று பிரம
மப்பிரயத்தனம் செய்தார்கள். புனர்விவாகத்தை ஆதரித்து சட்ட
மும் ஏற்படுத்தினார்கள். இவற்றின் பலன் என்ன என்று பார்த்
தால் அது மிகமிகக் குறைவேதான். இதற்குப் பல காரணங்கள்
உண்டு. பெண்களுக்கு முதல் விவாகம் செய்வதற்கே வரனுக்கு
ஆயிரக்கணக்கில் தக்ஷிணையும், பேராசை கொண்ட வரனது பெற்
றோர்களுக்கு வேண்டிய சீர்வகைகளும் செய்தும் அவர்களைத்
திருப்தி செய்ய முடியாமல் பெண்ணின் பெற்றோர்கள் தத்தளித்
துப்போகிறார்கள். ஆகவே, விதவையான பெண்களுக்குப் புனர்
விவாகம் செய்வதற்கு 10 மடங்கு செலவு செய்யவேண்டும்.
அப்படிச் செய்தாலும் அந்தப் பெண்களுக்கு சந்தோஷ வாழ்க்கை
கிடையாது—"விதவையாகிய உன்னை விவாகம் செய்துகொண்
டேனே! என் சிநேகிதர்கள் என்னை பரிகாசம் செய்கிறார்கள், நீ
எங்கேயாவது தொலைந்து போய்விடு" என்பது போன்ற பேச்சும்
ஏச்சும் பிடுங்கல்களும்தான் அதிகம்—என்னிடம் படித்துவிட்டுப்
போன என் மாணவிகள், மிகமிகச் சிலர் நூற்றுக்கு ஒருத்தி,—
புனர்விவாகம் செய்துகொண்ட அனுபவத்தைப் பிற்பாடு எழுது
கிறேன்.

தமிழ் மொழியில் வழங்கும் ப்ரபந்தமுறைகள் 96ல் எண்-செய்யுள் என்பது ஒருவகை; அதில் பாட்டுடைத்தலைவரது ஊரும் பேரும்வரும்; பத்துமுதல் ஆயிரம் செய்யுள்வரை பாடி, செய்யுளின் எண்ணிக்கையால் பெயரிடுவது வழக்கம். சந்திரனுக்குப் பதினாறு கலைகளிருப்பதுபோல் பதினாறு பாசுரக்களுடன் ஜ்வலிக்கும் இந்த ப்ரபந்தத்திற்கு ஆண்டாள் சந்திரகலாமாலை எனப் பெயர் வரலாயிற்று. — வை. மு. ஸ்ரீ.

# சந்திரகலாமாலை

●

"ஆலிநாடன்"

ஸ்ரீ ஆண்டாள் பாமாலையைப் பாடிக்கொடுத்தும் பூமாலையைச் சூடிக்கொடுத்தும் அரங்கனை மகிழ்வித்து நம்மையும் வாழ்வித்தருளின அவதாரவைபவம் ப்ரஸித்தம். பெரியாழ்வார் ப்ரார்த்தனைக் கிணங்க ரங்கமன்னரும் கோதைப்பிராட்டியும் அர்ச்சா வடிவத்துடன் ஸ்ரீவில்லிபுத்தூரில் கோயில்கொண்டு நித்யஸேவை தந்தருளலாயினர்.

சமீப காலத்தில் அரிய அதிசயம் ஒன்றை விளைவித்தாள் ஆண்டாள். திருமாலுக்கு இரு மாலை தந்தவள், தானும் ஓர் எளிய பக்தனிடம் ஒரு மாலை பெற்றுக்கொண்டாள்! அவளுக்கு ஆத்மாலங்காரமாய்த் திகழ்ந்த அம்மாலையே சந்திரகலாமாலை.

* * *

சுமார் நூறு ஆண்டுகட்கு முன்பு ஸ்ரீவில்லிபுத்தூரில் ஸ்ரீ ஆண்டாளுக்கு மன மொழி மெய்களில் தூயரான வில்லி என்னும் ஸ்ரீவைஷ்ணவர் ஒருவர் பரிசாரகப் பணியில் அமர்ந்து உள்ளன்புடன் நித்யகைங்கர்யம் செய்துவந்தார். சிசுவாயிருக்கும்போதே தந்தையை இழந்த இவர்க்கு வயது முதிர்ந்த தள்ளாத தாயொருத்தியே கதி. தான் செய்துவரும் கைங்கர்யத்துக்கு ஏதேனும் தடை நேருமோ என்று சங்கித்து இல்லறம் புகாமல் ப்ரம்மசர்யமே பூண்டு விளங்கினர். காளைப்பருவம் புகுந்தும் கன்னியரைக் கனவிலுங்கருதாது நனவிலும் கண்ணெடுத்துப் பாராமல் பரம வைராக்ய நிஷ்டராய்த் தமக்கென வகுத்த திருப்பணியிலேயே அனவரதமும் ஆனந்தத்துடன் காலங்கழித்துவந்தார்.

* * *

இத்தகைய உத்தம புருஷரையும் விதியின் விளையாட்டு விட்டபாடில்லை! அங்கமெலாம் அழுகித் தீண்டா வழும்பும் செந்நீரும் சீயும் செறிதசையும் வேண்டா நாற்றமிகும் உடலாகிவிட்டது!— தன் நோயினையும் நோய்தருந்துன்பினையும் ஒரு சிறிதும் பொருட்படுத்தாத அந்த பக்தர்க்கு, நித்யகைங்கர்யத்தை இழக்க நேர்ந்த நிலையே உள்ளத்தை ஊறு படுத்தியது.

அக்கால அரசாங்க முறைப்படி அவ்வூரிலுள்ள காட்டாற்றுக்கு அயலிலே ஓர் தனிக்கொட்டகை சமைத்து அதிலே அவரை

விட்டிட்டனர் கிராமத்தினர்—தொற்றுநோய் பிறரைப்பற்றிப் பரவாமல் இருத்தற்கு. பெற்றதாய்மட்டும் அன்றுடம் காய்ச்சின கஞ்சியும் கடாரத்தில் நீரும் ஏந்திச்சென்று தன் மகனது புண் நிறைந்த உடலைக் குளிப்பாட்டி ஆதரவாகக் கஞ்சியும் கொடுத்துத் தேற்றிவருவாள்.

மெய்புளகிக்கப் பரிசாரகப்பணிசெய்ய முடியாதுபோயினும், வாசா கைங்கர்யமாக ஆண்டாளைப் புகழ்வதும் அவள் அருளிச்செயல்களைப் ப்ரீதிக்குப் போக்குவிட்டுப் பாடுவதுமாகக் காலம் கடத்துவார். இன்னபோது இன்னதிருக்கோலமாயிற்றே! இன்னபோது இன்னஸேவையல்லவா ?...என்றென்றெல்லாம் உள்ளுருகுந்தோறும் உள்ளத்திரையில் ஆண்டாள் அளித்தருளும் காட்சிகள் அளவிலடங்கா.

*            *            *

இவ்வாறு பற்பல நாட்கள் செல்ல, ஒருநாள் இடிமின்னல் முழக்குடன் கடுமழை பொழிந்தது. காட்டாறு கரைபுரண்டு ஓடியது. நமது வைராக்யசிகாமணி "ஆழிமழைக்கண்ணா!" என்னும் ஆண்டாள் திருப்பாவைப் பாசுரத்தை பண்ணிசையுடன் பாடுகிறார். பொழுது விடிகிறது; மழையும் ஓய்ந்துவிடுகிறது. நாழிகையோ ஏறிக்கொண்டேவருகிறது. கொடிய நோய் உடையார்க்குப் பசிப்பிணி படாதபாடு படுத்துமன்றோ! நாழிகை பதினைந்துக்கு மேலாயிற்று; தாயும் வந்தபாடில்லை! வயிறு காய்கிறது. என்னசெய்வார் பாவம்! "நமது அன்னையும் அலுத்துச் சலித்துக் கைவிட்டுவிட்டாளோ ?" என்றும் ஐயப்படுகிறார். "பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்." என்பார்களே. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிஎண்ணி ஏழைநெஞ்சம் புண்ணாகப் போகும்போது 'கிணீர் கிணீர்!' என்று ஆண்டாள் ஸன்னிதி உச்சிக்கால மணியோசை இவர் செவியில் விழுகிறது.

"உனது அடியவன்பசிப்பிணியால் வாடிவதங்க, நீ உன்மணாளனுடன் குலாவிக்குலாவிக் கொட்டுமுழக்குத் திருமணிச் சேவையுடன் திருவமுது செய்கிறாயோ? அம்பரமே தண்ணீரே சோறே அறம் செய்யும் எம்பெருமான் நந்தகோபாலன் மருமகளே! உன் புகுந்த குலத்தின் பெருமைக்குச் சேருமோ உன்செய்கை! என்னை, எலி எலும்பனை—ரோகியை—நின் அடியனை ஏன் இப்படி வதை புரிகிறாய் ?"....என்று பற்பலவாறு அங்கலாய்த்துக்கொள்ளுகிறார், கண்களை மூடியவண்ணம் படுத்தபடுக்கையில் இருந்தபடியே.

கண்ணைத்திறக்கிறார். தன் தாய் வரும்வழியே நெடுநோக்குக் கொள்கிறார்; தள்ளாத கிழவி வருகிறாள்; விரைந்துவந்து நெருங்கி நிற்கிறாள். ஏற இறங்கப்பார்த்தார்—தனது தாய் நனைந்தபுடவையும் முழந்தாள்வரை பூசிய சேறுமாய் ஒரு கையில் கஞ்சியும் ஒரு கையில் குடநீரும் ஏந்தி வழக்கம்போல் எதிரே நிற்கிறாள்.

"குழந்தாய்! பசியால் துடிக்கிறாயோ? என்ன செய்வேன்! இரவில் பெய்த பெருமழையால் காட்டாறு கரைபுரண்ட வெள்ளம் கண்டுவிட்டது. நெடும்போதாக அக்கரையில் நின்றேன். இடுப்பளவாக வெள்ளந்தணிந்ததும் ஓடோடியும் வருகிறேன். செல்வ

மகனே! என்ன துடிதுடிக்கிறாயோ? இனியாவது தாமதமில்லாமல் குளித்துக் கஞ்சியைக் குடித்து இளைப்பாறுவாய்" என்று தன் அருளொழுகு விழிகளினால் மஞ்சனமாட்டிக் குடநீர்கொண்டு புண்களைக் கழுவித்துடைத்து வேறு வஸ்திரமுடுத்தி நெற்றியில் திருமண்காப்பையும் இட்டுக் கஞ்சியையும் ஊட்டினாள்.

இடையிடையே, "உண்மை இன்னதென ஊஹிக்கமாட்டாமல் உன்னிடம்கூட சந்தேஹம் கொண்டுவிட்டதே இந்தப்பாழும் மனம்—பசிப்பிணியின் கொடுமையால்." என்கிறார்.

தாய்:—என் செல்வமே! உன்னையன்றி இவ்வுலகில் எனக்கு வேறென்ன இருக்கிறது? உனது உள்ளன்புடன் கூடிய ஸன்னிதி கைங்கர்யத்தைப் போற்றாதவர்கள் இல்லை. என்கண்ணே! உன்னைச் சான்றோன் என்று ஊரார்கூறக் கேட்டு உள்ளம் உகப்பேன்—நீ இருக்கும் இந்த நிலையைக் கண்டு நான் படும்பாடு அந்த ஆண்டாளும் அரங்கனும்தான் அறிவர்.

வில்லி:—"அம்மா! நீ எனக்கு உணவுதானா கொடுத்தாய். உயிரன்றோ அளித்தாய். அது இருக்கட்டும். இன்று என்ன தனிப்பட்ட ஒரு போக்யதை நீ தந்த கஞ்சியில் ஏற்படுகிறதே! என்ன ருசி! கமகமவென்று மணத்துடன் இனித்திருக்கிறதே!'

தாய்:—கடும்பசியில் உப்பில்லாக்கூழும் அப்படித்தான் தோன்றும். தனிச்சிறப்பு என்ன இருக்கிறது?

மகன்:—நாவில் இனிமை இன்னும் அப்படியே ஒட்டிக் கொண்டிருக்கிறது அம்மா! உடம்பு கூட எரிச்சல் வலி எல்லாம் இருந்த இடமே தெரியவில்லையே! ஜில்லென்று ஒரு ஆனந்தம் உண்டாகிறதே!

தாய்:—சற்று இளைப்பாறுகிறாயா?

மகன்:—அம்மா! அம்மா! எனக்கு பயமாயிருக்கே. நீ வருவதற்குத்தாமதம் ஏற்பட்டதும் காரணம் அறியாமலே உன்னை நொந்துகொண்டதுமல்லாமல் கோயில் உச்சிகால மணியொலி கேட்டதும், உலகமாதாவான ஆண்டாளையு மன்றோ தூற்றிவிட்டேன்! ஏற்கெனவே, நெஞ்சறிந்து ஒரு தவறும் இழைக்காதிருந்தும் கர்மானுகுணமாக இப்படி அவதிப்படுகிறேன்; இன்று பசிக் கொடுமையால் சொன்னதைக் கருணைக் கடலாகிய ஆண்டாள் பொறுத்துக்கொள்ளுவாளா?

தாய்:—பொறுப்பாள், பொறுப்பாள்; கவலைப்படாதே. பசி ஆறியதா? சற்று படுத்துக்கொள். நான்போய் இனித்தான் புசிக்கவேண்டும். போய் வருகிறேன். உடம்பை ஜாக்ரதையாய்ப் பார்த்துக்கொள்.—என்று சொல்லிவிட்டு வெகு விரைவில் திரும்பிச் சென்றாள்.

* * *

என்றுமில்லாத ஓர் ஆனந்தத்தை அநுபவித்தவாறிருக்கையில் கருடத்வனி செவிகுளிர விழுகிறது. சடக்கென்று எழுந்து வெளியே வந்து கருடதரிசனம் செய்கிறார். "வேதஸ்வரூபியே! தேவரீர் ஸர்வதேச ஸர்வகால ஸர்வ அவஸ்தைகளிலும் ஸகலவித கைங்கர்யங்களையும் எம்பெருமானுக்குச் செய்து மகிழ்ச்சியடை

கின்றீர். தேவரீரே வாஹனமும்; தேவரீரே த்வஜபடமும். தேவரீர் சிறகின் கீழன்றோ பாதத்வம் வளர்கிறது. தேவரீரை இன்று கேட்டும் கண்டும் யான்பெறும் பயன் இணையற்றதாகும்! இது நிச்சயம்!" என்கிறார். கருடனும் இவ்வுத்தமர் தங்குமிடத்தையே வட்டமிட்டுக்கொண்டும் "க்ருஷ்ண க்ருஷ்ண" என்று இனிய த்வனியைச் செய்துகொண்டுமிருந்தார்.

* * *

"என்ன அதிசயம்! இதோ மறுபடியும் வன் எனது அன்னை திரும்பவும்வருகிறாள்! ஏதாவது வைத்து மறந்துவிட்டாளா?"

தாய்:—அப்பா! இதோ ஓடோடியும் வந்துகொண்டிருக்கிறேன். உன்னை இப்படி பட்டினிபோட்டுவிட்டேனே! ஸர்ப்பம் போலே சீறிக்கொண்டு காட்டாற்றில் வெள்ளம் கரைபுரண்டு வந்ததால் அது தணியுமட்டும் அக்கரையில் நெடும்போதாகக் காத்துக் கிடந்தேன். எனக்கு இருப்பாகவேஇல்லை. எழுந்திருந்து எங்கே வெளியில் வந்துவிட்டாயே! இன்னும் நீ பல்கூட துலக்கவில்லையா? நேற்று நான் இட்டதிருமண் இப்போதுதான் இட்டதுபோல் அப்படியே இருக்கிறதே! குளிப்பாட்டுகிறேன் வா!

மகன்:—இது என்ன அம்மா விசித்திரம்! நான் காண்பது கனவா? நனவா? சற்றுமுன்புதானே நீ வந்து எல்லா உபசாரங்களையும்செய்து அத்புதமான உணவையும் தந்துசென்றாய். ஏதோ வைத்துவிட்டதை எடுக்க வந்தாய் என்றல்லவோ எண்ணினேன்! எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!

தாய்:—என்னடா குழந்தை! இப்படிப் பேசுகிறாயே? நான் இப்போதுதானே வந்துகொண்டிருக்கிறேன். யார் வந்தாள்? என்ன கொடுத்தாள்? பசிக்களைப்பா? ஏன் இந்தமாறாட்டம்?....

மகன்:—அம்மா! ஒருவிதமான மாறாட்டமும் எனக்கு இல்லை. மிகவும் தெளிந்த அறிவுடன்தான் பேசுகிறேன். இன்று நீ தந்த உணவு தனிப்பட்டது. நீ சற்றுமுன் என்னைக் குளிப்பாட்டிய போதும் சரீரத்தில் உண்டான ஓர் ஆனந்தத்திற்கு அளவில்லை. இப்போது நீ மறுபடியும் வந்து என்னை உடல் குளிக்கவும் கஞ்சி குடிக்கவும் சொல்கிறாயே.

தாய்:—இதோபார்! கஞ்சி அப்படியே இருக்கிறது. இந்தக் குடத்தில் வாசநீரும் அப்படியே இருக்கிறது பார்த்தாயா? அதிக பசியில் உனக்கு ஒன்றும் தெரியவில்லை. இப்படிவா. உன்னைக் குளிப்பாட்டுகிறேன் பிறகு களை நீங்கி நல்ல ஞாபகமும் உண்டாகும். என் கண்மணியே!

மகன்:—அம்மா! அம்மா!! இதோ பார். இது என்ன விசித்திரம்! குறைந்துபோன விரல்கள் கைகளிலும் கால்களிலும் நீண்டு நிறைந்து முன்னிலும் அழகாகவும் உறுதிப்பாட்டுடனும் அமைகின்றனவே! சரீரத்தைப் பார். புண் இருந்த இடமே தெரியவில்லையே! எல்லா அவயவங்களும் கைங்கர்ய உபயோகி ஆகிவிட்டனவே! இத்தனைகாலம் இழந்தகைங்கர்யம் மறுபடியும் கிடைக்கும் போலிருக்கிறதே! இதென்ன! இவையெல்லாம் இந்திரஜாலம்

போல் இருக்கின்றனவே! என்னைத் தொட்டுப்பார் அம்மா! எல்லாம் உண்மைதானா?

தாய்:—என் அருமைக்குழந்தாய்! உன்னை இப்போதுதானே கொடுநோய் கதுவ அங்கம் குறைந்து அழகழிந்து குழிப்புண்களுடன் கண்டேன். என் கண்ணையே நான் நம்பவில்லை. உனது சரீரம் முழுதும் தங்கமயமாய் ஜொலிக்கின்றதே இதோ! நான் இப்போதுதான் வருகிறேன். ஆதலால் என் போல உனக்கு உணவு கொடுத்து உபசரித்தவள் நித்தம் நீ வழிபட்டு ஏத்தும் திருமல்லி வளநாடியாய்த்தான் இருத்தல்வேண்டும். கர்மம் பிடரிபிடித்துத் தள்ளப் பிறந்தவள் நான்; க்ருபையே வடிவெடுத்து அவதரித்தவள் கோதை: உன்னை மகனாகப் பெற்றவள் நான்; "அகில ஜகந்மாதரம்" என்றபடி உலகுயிர் அனைத்தும் ஈன்ற பச்சைப் பசுங்கிளி அவள். எனது சம்பந்தம் உன்னைப் படாதபாடு படுத்திவதைத்தது; மல்லி நாடாண்ட மடமயில் தன் ஸம்பந்தத்தால் உன்னைப் பொன் மேனியனாக்கினாள்.

மகன்:—அம்மா! நீ சொல்வதெல்லாம் ஸத்யம். இப்போது தான் நான் அறிகிறேன். எனக்குக் கொடுத்தகஞ்சி அமுதிலும் ஆற்ற இனிதாயிருந்தது. குளிப்பாட்டும்போதும் ஓர் அத்புத உணர்ச்சி உடல் முழுதும் உண்டாகியது. அம்மா! சரீரம்தான் குணப்பட்டதென்று எண்ணிவிடாதே இதோ நெஞ்சில் தோற்றும் அறிவொளியை என்னென்பேன். எம்பிராட்டி சூடிக்கொடுத்த சுடர்க்கொடியை நாவார வாழ்த்த விரும்புகிறேன். ஆனால் ஒரு எழுத்தும் நான் கற்கவில்லை. பிறந்ததுமுதல் கைங்கர்ய நிஷ்டையிலேயே திருஷ்டி. எனது மனம் பதைக்கிறது. இப்படிப்பட்ட அத்புதத்தைச்செய்த அருள் தேவியை ப்ரீதிக்குப்போக்குவிட்டுப் பாடுவேன்...ஆனால், எப்படித் துவக்குவது...ஒன்றும் அறியாதவனாயிற்றே! அகத்திலுள்ள ஆசையனைத்தையும் அப்படியே அமுத மொழிகளாய்க் கொட்டிவிடவேணுமென்று பேராவல் உண்டாகிறதே! தொல்பாவை பாடியருள்வல்லபல்வளையாய்! நான் என்னவென்று உன்னைப்பாடுவேன் ?...ஞானக்கை தா; காலக்கழிவு செய்யேலே..."

ஆகாசவாணி "பூ" என ஓர்இனிய ஓரெழுத் தொருமொழியை வெளியிட,

"பூமாதெனத் தேவர் போற்றிடத் தவமுனிவர்
புண்ணியப்பல மிதென்னப்
புவியோரனைத் துலகும் ஈன்றதாயென அறிஞர்
போதமீது செல்வமெனவே

நாமாதெனப்புலவர் கொண்டாட ஆழ்வார்கள்
நந்தல மடந்தையென்ன
நந்திருவரங்கேசர் தந்திருத்தேவியென
நாநிலத்தவதரித்தாய்!

பாமாறன் முத்தமிழ்த் திருவாய் மொழிப் பனுவல்
பாராட்டி ஆராட்டிடப்

பள்ளிதுயில் கொள்ளுமென் கிள்ளைக்கு வள்ளப்
பசுந்தேற லூட்டி மெள்ளத்

தேமா நறுங்கனி அருத்திக் கருத்துடன்
செங்கையிலிருத்தி வேதத்

திருப்பாவை முப்பதும் விருப்பாய் பயிற்றிடும்
திருமல்லி வளநாடியே.”

[தேவர்கள் உன்னை மலர்மங்கை என்று துதிக்கவும், தவத்திற் சிறந்த முனிவர்கள் தங்களது புண்ணியத்தின் பயனாகவே உன்னைக் கொண்டாடவும், பூலோகத்திலுள்ளோர்கள் “அகிலஜகன்மாதரம்” என்றபடி நீதான் எல்லா உலகங்களையும் பெற்றெடுத்த தாய் என்று போற்றவும், அறிவுடையோர் ஞானமாகிய பரம ஐசுவர்யம் நீயே என்று பாராட்டவும், புலவர்கள் கலைமகளே நீ என்று புகழவும், ஆழ்வார்கள் தங்களுடைய ஞானஸந்ததி நீதான் என்று வாழ்த்தவும், நமது திருவரங்கச்செல்வர் உன்னைத் தன் திருத்தேவி என்று உரிமை பாராட்டவும்—இவ்வாறு ஒவ்வொருவர்க்கும் அவரவர்கட்கு ஏற்ற சிறப்புடன்—இந்த பூலோகத்தில் நீ அவதரித்துள்ள வைபவத்தை என்னென்று சொல்லுவேன்! உனது நாட்டின் தனிச்சிறப்புதானென்னே! திருவாய்மொழி பாடி தாலாட்டி கிளிப்பிள்ளையைத் தூங்கச்செய்வதும், அது விழித்தெழுந்ததும் தேனும் கனிரஸமும் ஊட்டுவதும், பிறகு அதைக் கையிலேந்தி திருப்பாவை முப்பதும் கற்பிப்பதுமாகிய நிகரிலாப் பெருமை பொருந்திய வளம்பெற்ற திருமல்லிநாட்டில் பிறந்தவளன்றோ நீ!]

என்று பாடத் தலைப்பட்டனர் நமது வில்லியார். சொல்நோக்கும் பொருள்நோக்கும் தொடைநோக்கும் நடைநோக்கும் இறையினோக்கோடு பதினாறு பாசுரங்கள்பதினாறுகலைகள் கொண்ட பூர்ண சந்திரமண்டலம்போல் தண் நிலவு பொழிய கம்பீரமாய் வெளிப்பட்டதே சந்திரகலாமாலை!

தாயும் மகளும் கானம்ருதத்தை பானம் பண்ணிக்கொண்டிருக்கும்போது மேளதாளங்களுடன் ஒருபெரிய கோஷ்டி தங்களை நோக்கி வருவதை உற்றுநோக்கினர்.

ஆண்டாள் அருளப்பாடிட்டு கோயில் அனந்தகொத்து பரிஜனங்களையும் ஸன்னிதி பஹுமானங்களுடன் சென்று வில்லியாரை அழைத்துவர நியமனம் ஆக, அங்ஙனமே அவர்கள் வந்து வில்லியார்க்குத் திருப்பரிவட்டம்கட்டி ஸன்னிதி ஸன்மானங்களைச் செய்து நித்யகைங்கர்யத்துக்கு அழைத்துச்சென்றனர். அன்று ஸ்ரீவில்லிபுத்தூரில் நடந்த உத்ஸவத்தின்சிறப்பு வாசாமகோசரம்.

* * * * *

இந்த சந்திரகலாமாலை என்னும் அருள்மொழியை நித்யாநுஸந்தானமாகப் பாராயணம் செய்பவர்கள் பலர் என்றும், நோய்வாய்ப்பட்டவர்கள் இந்த பிரபந்தத்தை ஒரு மண்டலம் பக்தியுடன் பாராயணம் செய்ய எத்தகைய கொடியநோயாயினும் அது தீரப்பெறுகிறார்களென்றும் அநுபவம் வாய்ந்த ஆன்றோர் கூறுவர்.

புழுநெளிந் துண்டுவளர் தசைநரம் பென்புதோல்
புண்ணிணக் தும்பிராற்றப்
புரைப்பாழ்ங் குழிச்சல மலச் சேற்றழுந்திப்
புதைந்துழைந் தேனையெவருந்

தொழுமினிய பங்கயத் தாளா லெடுத்துமெய்ச்
சோதியமு தாலயமலர்த்
துணைவிழியி லானந்த வருண்மாரி
தோயக் குளிப்பாட்டினாய்

என்று தாம்பெற்றபேற்றைத் தாமே கூறுகிறார்.

ஆண்டாள் பகவானுக்குப் பசுங்கிளியாயும், அன்னமாயும், தீபமாயும், கோதையாயும் விளங்கியதை எவ்வளவு கவிநயத்துடன் பாடுகிறார் பாருங்கள்!

சுந்தரத் தோளழகர் மாலிருஞ் சோலையிற்
சொற்பசுங் கிள்ளையாகிச்
சோதிமண வாளர்தங் காவிரிநதித்துறைத்
தூயமட வன்னமாகிக்

கொந்தவிழ் மலர்ச்சுனைக் கோனேரியப்பனருள்
கொண்டதிரு வேங்கடப்பொற்
குன்றத்தி லேற்றிய விளக்காகி வடபெருங்
கோயிலுட் கோதையானாய்!

* * * * *

இந்த பக்தமணியின் மனோ பரிபக்குவத்தைப் பின்வரும் அடிகளே உள்ளங்கை நெல்லிக்கனியென விளக்குகின்றன:

மின்னற்ற மின்னெனப் பாவிக்க வைக்கினுமிவ்
வாழ்வையொரு பொழுதும்வேண்டேன்
வண்புதுவை மின்னினடி தொழுமவர் புறங்கடையில்
வைதுநா யெனவதுப்பாய்!

* * *

கண்படைத் ததுனைக் காணவுஞ் சென்னியுன்
கழலிணை வணக்கமுறவுங்
கையுனைப் போற்றவுந் நாவுனைப் பாடவுங்
காலுனை வலஞ்செய்யவும்

பண்புறச் செவியுனது வண்புகழ் கேட்கவும்
பாவித்த மிழ்மனிதனாய்ப்
பாரிற் பிறப்பதற் காசையல்லாலுனது
பரமபத வாழ்வும் வேண்டேன்!

திருமல்லி வளநாடி சீர்திருவடிகளே சரணம்.